'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XV  மே 2024  சான்று : 173





வட்டாரங்களில் உண்ணா நோன்பு செபம்

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் (மத் 28:19) என்ற கட்டளையை முழுமூச்சாக செயல்படுத்தி வரும் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். செபிக்கிறேன். இந்த இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாதம் பணிக்குடும்பம் இனம் காணப்பட்டவர்களுக்கு அறிமுக பயிற்சிகள், வட்டார தியானக் கூட்டங்கள் போன்ற நிகழ்வுகளை முன்னெடுக்க இருக்கின்றன. அனைவரின் சீரிய ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

யூதர்களுக்கு ஓய்வு நாள் சனிக்கிழமையெனில் கடைபிடித்தல் என்றால் (விப 20:8-11) கிறிஸ்தவர்களுக்கு ஞாயிறு, அதாவது வாரத்தின் முதல் நாள் ஆண்டவரின் நாளாகும். முத்துப்பேட்டையில் நடந்த தென்றல் கூடுகையில் நாம் அனைவரும் இறுதி நாளில் ஒரு உறுதிமொழி எடுத்தோம் நினைவு இருக்கிறதா?

1. எங்கள் இல்லங்களில் நடைபெறும் நிகழ்வுகளை முகூர்த்த நாள் நேரம் காலம் பார்த்து வைக்க மாட்டோம். 2. எந்த இல்ல நிகழ்வுகளையும் ஞாயிறு அன்று வைக்க மாட்டோம். 3. அழைப்பிதழ்களில் சாதி பெயர் இடம்பெறச் செய்ய மாட்டோம். சாதி சங்கங்களின் பெயரை அச்சிட மாட்டோம் என்று உளமாற கடவுளின் பிரசன்னத்தில் உறுதிமொழி ஏற்றோம். எந்த அளவுக்கு அவற்றை காப்பாற்றுகிறோம் என்று தெரியவில்லை அதில் ஒன்றை மட்டும் இப்போது சிந்திப்போம்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாள் ஞாயிறு. அந்த நாள் சாவுக்கும் நரகத்திற்கும் சாவு மணி அடித்தது (மத் 28:1,மாற் 16:9,யோவா 20:1). உயிர்த்தெழுந்த கிறிஸ்து தன் சீடருக்கு தோன்றிய நாளும் அதுதான் கிறிஸ்துவே யூதர்களின் ஓய்வு நாளை தவிர்த்து, உயிர்த்தெழுந்த நாளில் சீடர்களை உறுதிப்படுத்தினார் (யோவா 20:1,19,26). பெந்தகோஸ்து பண்டிகை என்பது ஓய்வு நாளுக்கு பிறகு உள்ள முதல் நாளில் வருகிறது. திரு அவை முதன் முதலில் தோற்றுவிக்கப்பட்ட நாள் ஞாயிறு. வாரத்தின் முதல் நாளில்தான் தூய ஆவியானவரும் நெருப்பு நாவு வடிவில் முதல் திரு அவையில் இறங்கினார். திருத்தூதர்கள் வாரத்தின் முதல் நாளான ஞாயிறை திருவழிபாட்டு நாளாக்கினர் (திப 20:7,1கொரி16:2,திவெ 1:10). கடவுள் யோவானுக்கு வெளிப்படுத்திய நாளும் முதல் நாளே. பழைய ஏற்பாட்டிலேயே முதலாம் நாள் சபை கூடும் தூய நாள் என்று கூறப்பட்டுள்ளது. முதல் நாளில் தானே கடவுள் மோசேக்கு கட்டளைகள் கொடுத்தார் (விப 19:1). முதல் நாளை தூய்மையாக அனுசரித்தார்கள். எப்படியெல்லாம் அந்நாளை தூய்மையாக அனுசரித்தார்கள் என்று பல்வேறு சான்றுகள் உள்ளன. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் நாளில் இறைவனைத் தேடி வழிபாட வேண்டும். ஏனென்றால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நாளே மற்ற எல்லா

நாட்களின் அரசி என்று அந்தியோக்கியாவின் ஆயர் இஞ்ஞாசியார் தெளிவாகக் கூறியுள்ளார்.

பர்னபாவின் எழுதியதாக கருதப்படும நற்செய்தி நூலில் பகுதி 1இல் எண்: 147-இல் கிறிஸ்து இறந்தவரிடமிருந்து உயிர்த்தெழுந்த எட்டாம் நாள் ஆசாரிப்பின் நாள் என்று எழுதப்பட்டுள்ளது. புதிய உடன்படிக்கையின் படி ஓய்வு நாள் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையை அதாவது ஆண்டவரின் நாளை கடைபிடிக்க, கொண்டாட வேண்டும். அன்றைய நாளில் இல்ல நிகழ்வுகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். அன்று சிறப்பாக திருவிவிலிய வாசிப்பு, தியானம், ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, நலிந்த யாரும் கண்டு கொள்ளாமல் இருக்கிற மக்களை சந்தித்து விடுதலைப் பணி மேற்கொள்ளல், பிறருக்கு நம்மாலான உதவிகளை செய்தல் போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டும். ஓய்வு நாள் எகிப்தின் அடிமைத்தனத்தை (இச 5:15) நினைவுபடுத்துமெனில் ஆண்டவரின் நாளான ஞாயிறு நமக்கு உயிர்ப்பை எடுத்துரைக்கிறது. புதிய ஏற்பாடு திருஅவையில் நமக்கு ஓய்வு நாள் கட்டளை இல்லை என்றாலும் ஞாயிறு கடைபிடிப்பு கட்டாயம் உண்டு. தொடக்கத் திரு அவை ஆண்டவரின் நாளான வாரத்தின் முதல் நாளில் கூடி வழிபட்டார்கள் என்று திருவிவிலியம் மற்றும் நமது மரபு தெளிவாக எடுத்துரைக்கின்றன. நமது சிறுவயதில் ஞாயிறன்று நமது கிறிஸ்தவ மக்கள் எந்த வேலையும் செய்யாமல் ஆண்டவரின் நாளைக் கொண்டாடினார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். சமீபத்தில் விண்ணகப் பிறப்பு அடைந்த அருள் தந்தை அல்போன்ஸ் நாதன், 'ஆண்டவரின் நாளை திருடாதே' என்று பறைசாற்றி வந்தார். எனவே நற்செய்தி பணியாளராகிய நாமாவது வாரத்தின் முதல் நாளை தூய்மையாக உண்மையாக அனுசரிக்க மறவாதிருப்போம். ஓய்வின் முழுமை என்பது உணர்தலிலும் உயிர்பிலேயுமே அடங்கியுள்ளது. ஆதலால் ஞாயிறு உயிர்ப்பின் நாளாகும். ஞாயிறு உயிர்ப்பு, மீட்பு மற்றும் எதிர் நோக்கின் தினமாகும்.

வாரத்தின் இறுதி நாளில் கடவுள் தமது படைப்புத் தொழிலை நிறைவு செய்து ஓய்வு எடுத்தார் என்று பழைய ஏற்பாடு கூறுகிறது. ஆனால் நம் ஆண்டவர் இயேசு தமது பாடுகள், மரணம், சிலுவைச் சாவு, உயிர்ப்பு மூலம் பாவத்தால் அழிந்து போன மனிதனை புதுப் படைப்பாக்கி மீட்டருளினார் என்று புதிய ஏற்பாடு பகர்கிறது. தொடக்கத் திரு அவை ஞாயிறு அன்று இறைவார்த்தையை போதிப்பதிலும், கற்பிப்பதிலும், அப்பம் பிடுதலிலும் நிலைத்திருந்தார்கள் என்று அறிகிறோம் (திப 20:7). எனவே ஞாயிற்றுக்கிழமையின் அதாவது ஆண்டவரின் நாளை உணர்ந்து அனுசரிப்போம்.

உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரர்,

நற்பணி **அ. சகாயராஜா**



# இது சாத்தியமா ?

தவக்கால களப்பணியில் ஒரு நாள் இல்ல சந்திப்பின்போது நடந்த நிகழ்வு .

நானும் மற்றொரு பணியாளரும் பெரியவர் ஒருவரை சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த தருணம். என் உடன் வந்திருந்த பணியாளர் சகோதரருக்கு திடீரென தொடர் விக்கல். நாங்கள் தொடர் உரையாடல் நடத்துவதற்கும் அவரது விக்கல் சற்று தடையாக இருந்தது. சட்டென்று சிந்திக்காமல் பெரியவர் சொன்னார், 'அந்த பணியாளர் தம்பி இன்று காலையில் ஒரு தப்பு பண்ணிருக்காரு; அதனால்தான் தொடர் விக்கல்'. நான் உடனே தாமதிக்காமல் 'அய்யா இந்த பணியாளர் தம்பிய இப்பத்தான் நீங்க பாக்குறீங்க! இவர் யாருன்னே உங்களுக்கு முன்ன பின்ன தெரியாது! அந்தப் பணியாளர் மேல இப்படி குற்றச்சாட்ட வக்கிறீங்களே அய்யா! இது நியாயமா?' என்று சொல்லி இடைமறித்தேன். அந்தப் பெரியவரோ உறுதியாய் மீண்டும் சொன்னார், 'அவரு ஒரு தப்பு பண்ணிருக்காரு! உங்களுக்குத் தெரியாது. நீங்க சும்மா இருங்க'. அதிர்ந்து போனோம். சமாளிக்க முடியாத சூழ்நிலையால் பதறிப்போனோம். ஒரு நிமிட அமைதி! மீண்டும் பெரியவர் தொடர்ந்தார், 'பாத்தீங்களா, நான் ஒரு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து, உங்களது விக்கலை நிறுத்திட்டேன்'. உண்மைதான்! பணியாளரின் விக்கல் நின்றுபோனது. எங்களுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சி! மற்றொரு பக்கம் அதிர்ச்சி! நடக்காத சம்பவத்தை நடந்ததாகக் கூறி அதிர்ச்சி அளித்து. அந்த விக்கலிலிருந்து விடுவிக்கப்பட்டார் பணியாளர்.

அச்சமயத்தில் இயேசு இறைவார்த்தையைக் கொண்டு அலகையின் சோதனையை (மத் 4) மேற்கொண்டதை நினைவுகூர்ந்தோம் . தீமைகளுக்கு மத்தியிலும் நிதான சிந்தனை மூலம் தீமையிலிருந்து விடுதலை பெறுவது சாத்தியம்தானே!

நற்பணி **அருள் இளங்கோ**, இராம்நகர்

---

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

-எல்லாரோ

கொடூரமான உலகிலே, மென்மையான மனம் கொண்டு வாழ்வது- பலவீனமல்ல; மாபெரும்...... ஆற்றல்.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல் செய்; ஏனெனில், அதனின்று பிறப்பவை உன் வாழ்க்கையின் போக்கை உறுதிசெய்யும்.
நீதிமொழிகள் 4:23

ஏப்ரல் 2024

# புதிய பணியாளர்கள் பயிற்சி

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 07.04.2024 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி S.இராஜேந்திரன், செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 07.04.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A.சகாயராஜா, நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி V. செங்கோல் மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 13.04.2024 அன்று நடைபெற்றது. 15 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி J. ரபேக்கா, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -IV இராமநாதபுரம், புனி செபமாலை அன்னை கோவிலில் 14.04.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி. நற்பணி S. அந்தோனி பிரகாஷ், செயலர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -V அமைதியகம், காயாவயலில் 21.04.2024 அன்று நடைபெற்றது. 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி ஜோஸ்பின் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VI சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 21.04.2024 அன்று நடைபெற்றது. 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி GMS ராணி, நற்பணி M.அருள் மரிய நாயகம், நற்பணி P. ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VII இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 28.04.2024 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி S. பால்ராஜ், நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -VIII கமுதி, புனித அந்தோணியார் கோவிலில் 28.04.2024 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி A.பிரான்சிஸ் சேவியர், நற்பணி T.மிக்கேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

## கடந்த மாதச் செயல்பாடுகள்

03.4. 2024 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 34 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி AR. சூசைராஜ், நற்பணி P. அமலோற்பவ ஆரோக்கிய ராணி, நற்பணி B. ஸ்டெல்லா மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

03.4.2024 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 68 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. அடைக்கலம், நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி இரா. மரிய அந்தோனி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

05.4.2024 அன்று மகிண்டி மிக்கேல்பட்டிணம் புனித மிக்கேல் அதிதூதர் கோவிலில் முழுஇரவு செப வழிபாடு நடைபெற்றது. நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. மோட்ச அலங்காரம் நற்பணி S. ஆரோக்கியசாமி, நற்பணி சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

06.4.2024 அன்று இடைக்காட்டூர் இயேசுவின் திரு இருதய ஆலயத்தில் பரிந்துரை செபம் நடைபெற்றது. இதில் பரமக்குடி வட்டாரத்தைச் சார்ந்த நற்பணி S.மரிய செல்வராஜ், நற்பணி சே. வென்சி ரீட்டா, நற்பணி கெ. ஸ்டெல்லா ராணி, நற்பணி A. மல்லிகா ஆகியோர் பங்கேற்று செபித்தார்கள்.

09.4. 2024 அனைத்து வட்டாரங்களிலும் பாராளுமன்ற தேர்தலுக்கான சிறப்பு உண்ணநோன்பு செபம் நடைப்பெற்றது.

தமிழ்நாடு முப்பணி நிலையம் வழங்கிய தன்னார்வ மறைபரப்புச் சீடர்கள் உருவாக்கப் பயிற்சி ஏப்ரல் 10 முதல் 16 வரை திண்டிவனத்தில் நடைபெற்றது. சிவகங்கை மறைமாவட்டம் சார்பாக நற்செய்திப் பணியாளர்கள் செபஸ்டின் தார்சீஸ், அமலோற்பவ ஆரோக்கியராணி, சந்திரபுஷ்பா, ஜஸ்டின், லூயில் ஜான்போஸ்கோ ஆகியோர் பங்கேற்றனர்.

28.4.2024 அன்று அருட்சான்று நிலையத்தில் விரிவாக்க உள்ளுயிர் குழுக் கூட்டம் நடைப்பெற்றது. இதில் 74 பணியாளர்கள் கலந்து கொண்டார்கள். கடந்த செயல்பாடுகளின் திறனாய்வும் எதிர்காலத்திற்கான திட்டமிடலும் மேற்கொள்ளப்பட்டன.

## ஆடுகளுக்கு வாயில் நானே

தனக்குத் தானே பிளவுபடும் எந்த அரசும் பாழாய் போகும் (லூக் 11:17)

தனக்குத் தானே பிளவு படும் வீடோ அல்லது அரசோ நிலைத்து நிற்க இயலாது. அது பாழாய்ப் போகும் என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார். ஒரு காட்டில் நான்கு எருதுகளும் ஒரு சிங்கமும் இருந்தன. அந்த நான்கு எருதுகளும் தினந்தோறும் ஒரே இடத்தில் ஒற்றுமையாகச் சென்று இரை தேடி வந்தன. அந்த எருதுகளை அடித்து உண்ணுவதற்கு பல முறை சிங்கம் முயற்சி செய்தது. ஆனால் எருதுகள் ஒன்றாய் சேர்ந்து சிங்கத்தை விரட்டி விடும். இது சிங்கத்திற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இதைக் கண்ட ஒரு நரி சிங்கத்திடம் சென்று

நீங்கள் நாளைக்கு இந்த இடத்திற்கு வாருங்கள். இந்த எருதுகளைச் சாப்பிடலாம் என்று கூறிவிட்டு எருதுகளிடம் சென்று நீங்கள் தனித்தனியாகச் சென்றால் உங்களுக்கு வேண்டிய நல்ல மேய்ச்சல் கிடைக்கும் என்று ஆசை வார்த்தைகளை கூறி அந்த எருதுகளைப் பிரித்துவிட்டது. இப்போது சிங்கம் மிக எளிதாக அந்த எருதுகளை ஒவ்வொன்றாக அடித்து கொன்றது.

விவிலியத்தில் சிங்கத்தை அலகைக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது (1 பேது 5:8). ஒருவரை விட்டு வெளியேறுகின்ற தீய ஆவி வறண்ட இடங்களில் அலைந்து திரிந்து இளைப்பாறி இடம் தேடும். இடம் கிடைக்காததால் தான் விட்டு வந்த வீட்டிற்குச் சென்று அது அழகுப்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டு தன்னை விட பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டி வந்து அந்த வீட்டில் தங்கும். இப்போது அவருடைய பின்னைய முன்னைய நிலைமையைவிட கேடுள்ளதாக இருக்கும் என்றார் (லூக் 11:23-26). ஆண்டவர் தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி திரு அவையை ஏற்படுத்தினார் (திப 20:28). திருஅவை கறைதிரையோ வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தம்முன் விளங்குமாறு இப்படிச் செய்தார் (எபே 5:27). அலகையின் எல்லா அதிகாரங்களையும் இயேசு ஒருவராக சிலுவையின் வழியாக அழித்து தூய்மைப்படுத்தி திரு அவையை ஏற்டுத்தினார் (கொலோ 2:14-15). அத்தகைய பாடுகளின் வழியாக ஏற்படுத்திய திரு அவைக்குள் மீண்டும் எந்த பிரிவினை சக்திகளும் வந்துவிடக் கூடாது என்பதற்காகவும் தனக்குப் பின் திருஅவையைப் பொறுப்போடு நடத்தப் போகிறவர்களுக்காகவும் தந்தையிடம் மிகவும் உருக்கமாக ஒரு வேண்டுதல் செய்தார். அதில் மிகவும் முக்கியமானது எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக!. தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும் என்றார் (யோவா 17:21). இங்கே ஆண்டவர் விரும்புவது அவரது பிள்ளைகள் ஒன்றாய் இருக்கும்போது இந்த உலகம் இவர் தான் உலக மீட்பர் என்பதை நம்பும் அவரை அறிந்து கொள்ளும் என்கிறார். ஆனால் இன்றைக்கு உடைந்து போன வீட்டைப் போல உடைந்து சிதறிய தேங்காயைப் போல கிறிஸ்தவர்கள் என்று பெயரை வைத்துக் கொண்டு எத்தனை பிரிவினைகள்? எத்தனை சாதிச் சங்கங்கள்? எத்தனை கட்சி மனப்பான்மைகள்? இவைகளைக் கண்டு ஆண்டவர் மகிழ்வாரா? புனித பவுலின் காலத்தில் கொரிந்து சபையில் பிளவு ஏற்பட்டபோது அதைக் கண்டு அவர் மிகவும் மனம் உடைந்து போனார். சகோதர சகோதரிகளே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஒத்தக் கருத்துடையவர்களாய் இருங்கள். உங்களிடையே பிளவுகள் வேண்டாம் என்று மிகவும் வலியுறுத்திக் கூறுகிறார் (1 கொ 1:10).

மேலும் அங்கு இரு பிரிவினரைக் கண்டு நாங்கள் பவுலைச் சேர்ந்தவர்கள் நாங்கள் அப்போல்லோவைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதைக் கேட்டு கிறிஸ்து இப்படி பிளவுப்பட்டுள்ளாரா? அல்லது பவுலா உங்களுக்காகச் சிலுவையில் அறையப் பட்டார் என்று மிகவும் வேதனைப்படுகிறார் (1 கொ 1:12-13). மாற்று

கருத்து உடையவர்களைப் பற்றி அந்த கெட்ட ஊழியர்களிடம் எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் உடலைச் சார்ந்தவற்றில் உறுதியான நம்பிக்கைக் கொள்ளாமல் கடவுளின் தூய ஆவியானவருக்கு ஏற்ப வழிபட்டு கிறிஸ்து இயேசுவைப் பெருமைப் படுத்தும் நாமே உண்மையான விருத்தசேதனம் செய்து கொண்டவர்கள் என்று கூறி பிரிவினைகளை அகற்றுகிறார் (பிலி 3:2-3). தூய ஆவியானவர் தெளிவாய் கூறுகிறபடி இறுதி காலத்தில் சிலர் ஏமாற்றும் ஆவிகளுக்கும் பேய்களின் போதனைகளுக்கும் செவிசாய்த்து விசுவாசத்தைவிட்டு விலகிப் போவர் (1 திமொ 4:1). இப்படிப்பட்டவர்கள் விசுவாசமெனும் கப்பலையே உடைத்து போகச் செய்வர் என்று எச்சரிக்கிறார் (1 திமொ 1:19). இவ்வாறு பிரிவினைகளை அகற்றி அவர்கள் ஒரே எண்ணமும் ஒரே நோக்கமும் கொண்டவர்களாய் இருந்ததால் அவர்களால் உலகம் முழுவதும் மிக எளிதாக நற்செய்தியை எடுத்துச் செல்ல முடிந்தது (திப 17:6). நற்செய்தி அறிவிப்புப் பணிக்குத் தடைகள் வந்தபோது அவர்கள் ஒரே மனத்துடன் தங்கள் குரலைக் கடவுள்பால் எழுப்பி மன்றாடினார்கள். அவர்களது ஒற்றுமையைக் கண்ட ஆண்டவர் உடனே பதிலளித்தார். அங்கே மிகப்பெரிய அசைவுகள் ஏற்பட்டன (திப 4:23-31). கடவுளின் பிள்ளைகள் இந்த உலகில் ஒன்றாய் கூடிவரும்போது அது எத்தனை ஈடு இணையில்லாத நிறைவு என்பதை அது எத்துணை நன்று எத்துணை இனியது அது ஆரோனின் வழிந்தோடி அவர்தம் அங்கியின் விளிம்பை நனைப்பதற்கு ஒப்பாகும் என்று தாவீது வர்ணிக்கிறார் (திபா 133:1).

இது நாம் ஒத்தக் கருத்துடையவர்களாய இணைந்து செயல்படும்போது தூய ஆவியானவரின் அருள்பொழிவு எவ்வளவு நிறைவாய் செயல்படுகிறது என்பதை உணர்த்துகிறது தொடக்கத் திருஅவைகளின் ஒற்றுமைக்கு என்ன காரணம்? புனித பவுல் குறிப்பிடுவது எழுதியுள்ளதற்கு மேல் போகாதே என்பதன் பொருளை எங்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் (1 கொ 4:6). மேலும் ஏற்கனவே அடித்தளம் இட்டாயிற்று. இவ்வடித்தளம் இயேசு கிறிஸ்துவே வேறோர் அடித்தளத்தை விட எவராலும் முடியாது என்பதில் அவர்கள் உறுதியாய் இருந்தார்கள். (1 கொ 3:9-11) கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திராமல் வரம்பு மீறிச் செல்வோர் கடவுளைக் கொண்டிருப்பதில்லை. அவர் போதனையில் நிலைத்திருப்போரிடமே தந்தையும் மகனும் இருக்கிறார்கள் என்று புனித யோவான் குறிப்பிடுகிறார். (2 யோ : 9) எத்தனை பிரிவினைகள் வந்தாலும் நம் விண்ணகத் தந்தையின் திட்டமே நிறைவேறும். கால நிறைவில் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையுமே கிறிஸ்துவின் தலைமையில் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற திட்டமே அம்மறைபொருள் (எபே 1:10). எனவே திருஅவைக்குள் காணப்படுகிற அலகையின் பிரிவினைகள் அழிக்கப்பட கடவுளின் பிள்ளைகளுக்கிடையே ஒரே எதிர்நோக்கு உண்டாக கடவுளின் திட்டம் நிறைவேற ஆண்டவர் இயேசுவைப் போல ஒவ்வொரு நாளும் உருக்கமாக விண்ணகத் தந்தையிடம் மன்றாடுவோம்.

நற்பணி M.**விசுவாசம்.** செஞ்சை.

"அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் கால்களில் மிதியடிகளாகப் போட்டுக் கொள்ளுங்கள்" (எபே6:15)

நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலைகளில் முதன்மையானதும் உயிர்ப்புள்ளதுமான அன்பு பற்றித் தொடர்ந்து தியானித்து வருகிறோம். அன்பின் மூன்று பரிமாணங்களைப்பற்றித் தியானித்து வருகிறோம். பிறரை அன்பு செய்து வாழ்பவர்கள்தான் உயிரோட்டமுள்ள வாழ்க்கையை வாழ்பவர்கள். பிறரை அன்பு செய்ய இயலாதவர் உயிர் இருந்தும் நடை பிணங்களாகவே இருப்பர். மனிதர்களைத் தோற்றத்தை வைத்தோ, சாதியை வைத்தோ, பணத்தை வைத்தோ மதிப்பீடு செய்வது பிறர் அன்புக்கு எதிரான செயலாகும். "நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை" (யோவா15:17) என்று ஆண்டவர் இயேசு கட்டளையாகக் கொடுத்துள்ளார். கட்டளையை மீறுவது பாவம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். பிறரை அன்பு செய்ய இயலாத நாம் கட்டளையை மீறுகின்றோம் என்பது தெளிவாகிறது. நாம் பிறரை அன்பு செய்யவில்லை என்றால் பாவம் செய்கிறோம். "அவருடைய கட்டளை நிலை வாழ்வு தருகிறது என்பது எனக்குத் தெரியும்" (யோவா12:50). நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நாம் பிறரை அன்பு செய்து வாழ வேண்டும். பிறரை அன்பு செய்யும் பொழுது எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அன்பு செய்ய வேண்டும். பிறரை அன்பு செய்வதால் இயேசுவின் அன்பை நாம் பிறருக்கு கொடுக்கிறோம் என்பதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன் உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்" (லூக் 6:27). ஆண்டவர் இயேசு எல்லாருக்கும் இதைச் சொல்லவில்லை நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்குக் கூறுகிறேன் என்று தொடங்குகிறார். நாம் எல்லோரும் தினமும் அவர் பாதத்தில் அமர்ந்து செபிக்கிறோம். அவருடைய வார்த்தைகளை வாசிக்கின்றோம்; தியானிக்கின்றோம். அதிலிருந்து பலவற்றைக் கற்றுக் கொள்கின்றோம். கற்றுக் கொண்டவற்றை வாழ்வாக்க முயற்சிகள் செய்கின்றோம். அப்படியானால், நாமும் அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர்கள்தானே? நம்மைப் பார்த்து தான் ஆண்டவர் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறவர்களே என்று அழைத்து உங்கள் பகைவர்களிடம் அன்பு கூறுங்கள் என்று கூறுகின்றார். அடுத்திருப்பவர்களை அன்பு செய்யச் சொல்லி கட்டளை தந்த ஆண்டவர், உங்கள் பகைவர்களையும் அன்பு செய்யுங்கள் என்று அறிவுரை கூறி அடுத்த படி நிலைக்கு நம்மை நகர்த்திக் கொண்டு செல்கின்றார்.


பகைவரை அன்பு செய்தல் எளிதான காரியமா? எனக்கு இப்படி யார் மீதாவது அன்பு செய்யக் கடினமாக இருந்தால் நம் இயேசு ஆண்டவர் இன்னும் சற்று நேரத்தில் தன்னை யூதாஸ் காட்டிக் கொடுக்கப் போகிறாள் என்பதை அறிந்திருந்தும் தாழ்ச்சியோடு அவர் பாதங்களைக் கழுவி, அன்போடு

முத்தமிட்டு, உணவையும் பகிர்ந்து கொடுத்து நீ செய்ய விருப்பதை விரைவில் செய் (யோவா 13:27) என்று அனுப்பி வைத்த நிகழ்வை நினைத்துக் கொள்வேன். இயேசுவே இவர்களை அன்பு செய்ய உமது கல்வாரி அன்பினால் என்னை நிரப்பும் என்று அறிக்கையிடுவேன். அவர்களை அன்பு செய்யும் ஆற்றலை ஆண்டவர் தூய ஆவியானவரின் வழியாக எனக்குத் தருவார்.

நீ அன்பு செய்தால் மட்டும் பேதாதது உன்னை வெறுப்போருக்கு நன்மை செய் என்று ஆண்டவர் கூறுகின்றார் (லூக் 6:27). நன்மை செய்யும் போதுதான் அன்பு நிறைவடைகிறது. அதனால்தான் ஆண்டவர் நம்மை வெறுப்போருக்கு நன்மை செய்யக் கூறுகிறார். நன்மையால் மட்டும் தான் வெறுப்பு என்னும் தீமையை வெற்றி கொள்ள முடியும் இதைத்தான் புனித பவுல் அடியாரும் "நன்மையால் தீமையை வெல்லுங்கள்" என்று கூறுகிறார் (உரோ12:21). நமக்கு வருகிற தீமைகளை நன்மை செய்வதால் மட்டுமே வெற்றி கொள்ள முடியும். பிறரை அன்பு செய்வதில் அடுத்த நிலையாக உடன் பிறப்புகள் போன்று அன்பு செய்ய வேண்டும். "உடன்பிறப்புகளை போன்று ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள்" (உரோ12:10) பிறரை அன்பு செய்யும் போது உடன் பிறப்புகளை எவ்வாறு குறைநிறைகளோடு ஏற்றுக்கொண்டு அன்பு செய்கின்றோமோ அதுபோல அன்பு செய்ய வேண்டும் என்று புனித பவுல் வழியாக ஆண்டவர் நமக்குக் கற்றுத் தருகிறார். எனவே பிறரை அன்பு செய்து அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிக்கத் தயார் நிலையில் இருப்போம். அன்பு சக்தியாம் ஆண்டவர் இயேசுவோடு இணைந்திருக்க செபத்தில் நிலைத்திருப்போம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



கடவுளின் ஞானத்தை வெளிப்படுத்தத் திருஅவையை உருவாக்கியவரே (எபே 3:10) இறைவா!!

திரு அவையின் பிறந்த நாளாம் பெந்தகோஸ்துப் பெரு விழாவைக் கொண்டாடும் நாங்கள், பிறர் கவனம் ஈர்க்கக் கொண்டாடும் மற்றொரு விழாவாகக் கடந்து போகாமல், எங்கள் வாழ்வை மாற்றும் ஒரு விழா என்பதை உணர்ந்து நாங்கள் தூய்மை பெறவும் (1தெச 3:13), ஒளி பெறவும் (பிலி 2:15), புனித வாழ்வை நோக்கிப் பயணிக்கவும் (உரோ 8:2) ஆற்றல் பெறவும் (உரோ 8:26) ஆற்றல் இழந்தோரை ஊக்குவிக்கவும் (1பேது 4:10) வழி தவறிப் போன ஆடுகளை மீட்டுக் கொள்ள (மத் 10:6) உழைக்கவும் வேண்டிய மனநிலை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறேன்.

# சமூகத் தீமைகளை களைவோம்

மறைப்பரப்புப் பணிக்கு இந்தியாவிற்கு வந்த மறைப்பணியாளர்கள் இயேசுவின் மனநிலையில் இருந்ததால் மக்கள் மேல் பரிவு கொண்டார்கள். ஒரு மனிதனுக்கு முதல் தேவை மானத்தை மறைக்க உடையும், உயிர் வாழ உணவும் தானே. ஆனால் மேற்கூறிய இவை இரண்டும் இல்லை என்றால் நாம் சொல்வது எப்படி காதில் விழும்?. நற்செய்திப் பணி என்பது வாழ்வின் தேவைகளை அறிந்து அவற்றை அவர்கள் பெற்றுக்கொள்ளத் துணை செய்வதுதானே?. ஆபத்தில் இருக்கும் ஒரு மனிதனுக்கு அந்த ஆபத்திலிருந்து தப்பிக்க வழங்கப்படும் செய்தியே அவனுக்குரிய நற்செய்தியாக இருக்கும். உண்மையான வழிபாடு என்பது மந்திரங்களை மனப்பாடம் செய்வதும் அதை ஒப்பிப்பதும் இல்லை. அது மனத்துடன் தொடர்புடையது. உங்கள் வாழ்வு மகிழ்ச்சியுடன் இல்லையென்றால் உங்கள் மனது வழிபாட்டில் ஈடுபடாது. அதனால்தான் மறைபரப்பாளர்களை இங்குள்ள மக்களை பார்த்தார்கள். அவர்கள் மகிழ்ச்சியை அடைய கல்வி, தொழில் போன்றவற்றை கொடுத்தார்கள். அடுத்த வேலை உணவை மட்டுமே நினைத்த மனதுக்கு இப்பொழுது மற்றதை சிந்திக்க நேரம் கிடைத்தது. எங்கோ இருந்து வந்தவர்கள் தங்கள் மேல் அன்புகாட்ட என்ன காரணம் என்று சிந்தித்தனர். இயேசுவை கண்டுகொண்டனர். இயேசுவின் அன்பை சுவைத்து மனம் மாறினர். பெறுவதில் இல்லை இன்பம் கொடுப்பதில் தான் உள்ளது என்று உணர்ந்து தங்களது சொத்துக்களைக் கூட கோவில்களுக்கு கொடுக்கும் அளவிற்கு நம்பிக்கை வாழ்வில் வளர்ந்தனர். ஆனால் சில சமூகத் தீமைகளைப் களைய கால அவகாசம் கிடைக்காமல் மறைப்பரப்பாளர்கள் கிறிஸ்தவத்துக்குள் சில பிரிவினைச் செயல்பாடுகளை வேரறுக்காமல் விட்டனர். ஏனென்றால் 'அறுவடை மிகுதி வேலையாட்களோ குறைவு (மத் 9:37) என்று குறிப்பிட்டது போல இயேசுவின் பணிக்கு இயேசுவின் மனநிலையில் பணி செய்ய வேலையாட்கள் குறைவாகவே இருந்தனர். அதனால் அலகை திருஅவைக்குள் களைகளை விதைத்தான் 'இனி வாழ்வது நான் அல்ல. கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்' ( கலா 2:20) என்ற இறை வார்த்தையின்படி நமக்குள் கிறிஸ்து வாழ்ந்தால் நாம் அவரைப் போன்ற மனநிலை பெறுவோம். 'என் சகோதர சகோதரிகளே, உங்களுள் ஒருவர் உண்மையை விட்டு நெறிதவறி அலையும்போது வேறொருவர் அவரை மனந்திரும்பச் செய்தால், தவறான நெறியிலிருந்து மனந்திருப்புகிறவர் அவரை அழிவிலிருந்து மீட்பார் என்பதையும் திரளான பாவங்களைப் போக்குவார் என்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்' (யாக் 5:19-20) என்னும் இறைவார்த்தையை நன்கு அறிந்தவர்கள் நாம். சமூகத் தீமைகளிலிருந்து விடுதலை பெற என்ன முயற்சி செய்கிறோம்?

'கண்டுகொள்ளாமை என்னும் பாவத்தினால்தான் செல்வந்தன் வேதனை அடைந்தார். லாசர் ஆபிரகாம் மடியில் ஓய்வு எடுத்தார் 'என் சகோதர சகோதரிகளை தன்னிடம் நம்பிக்கை உண்டு என்று சொல்லும் ஒருவர் அதை செயல்களில் காட்டாவிட்டால் அதன் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா?' (யாக் 4:12) என்பதை சிந்தித்துப் பார்ப்போம். நமக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் கடவுள் ஊதிய அந்த உயிர்மூச்சுத்தான் மற்ற மனிதர்களுக்குள்ளும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்வோம். நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் எந்த வண்ணப் பானையில் ஊற்றினாலும் ஒரே தண்ணீர்தான்; பானை உடைந்தால் தண்ணீர் மீண்டும் வந்த இடத்திற்கே போய் விடுகிறது. பணியாளர்களாகிய நாம் முதலில் நம்மில் நிலவும் வேறுபாடுகளைக் களைய முற்படுவோம். வேறுபாடுகளைக் கடந்த இறைச் சமூகத்தை உருவாக்க வாழ்வாலும் பணியாலும் முயல்வோம்.

நற்பணி **ஜஸ்டின்**

# உலக வாழ்வு! உன்னத வாழ்வு!

உலகத்தோடு நட்பு கொள்வது கடவுளைப் பகைப்பது என்பது உங்களுக்குத் தெரியாதா? உலகுக்கு நண்பராக விரும்பும் எவரும் கடவுளைப் பகைத்தவர் ஆவார் (யாக் 4:4). ஆகவே, உலகின்மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள் (1 யோவா 2:1). ஏனெனில், இவ்வுலகம் தற்காலிகமானது இவை மறைந்து போகும் (1 யோவா 3:17). ஆகவே, இந்த உலகப் போக்கின்படி ஒழுகாதீர்கள் மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! (உரோ 12:2). நாம் முடிவுல்லா உன்னத வாழ்வு வாழ்வதற்கே அழைக்கபட்டுள்ளோம். நாம் இவ்வுலகிற்கு உரியவர்கள் அல்ல விண்ணகமே நமது தாய்நாடு (பிலி 3:20). நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும் இவ்வுலகத்தால் கரைபடியாதபடி காத்துக் கொள்ளவும் எதிர்காலத்தை தேர்ந்து கொள்ளவும் வாய்ப்பு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டால் முடிவில்லாத நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள முடியும்.




ஒரு விசித்திரமான சட்டம் கொண்ட நாடு அந்த நாட்டில் யார் வேண்டுமானாலும் ஐந்து ஆண்டுகள் அரசராக ஆட்சி செய்யலாம். ஆனால், ஒரு நிபந்தனை ஐந்து ஆண்டுகள் முடிந்ததும் திரும்பி வரமுடியாதவாறு ஆற்றுக்கு அப்பால் கொடிய மிருகங்கள் உள்ள காட்டில் விட்டுவிடுவார்கள். அப்படிச் சென்றவர்கள் யாரும் திரும்பியதாக சரித்திரம் இல்லை. எனவே, உயிருக்குப் பயந்து யாரும் ஆட்சி செய்ய முன்வருவதில்லை. அப்படியே ஆட்சிக்கு வந்தாலும் மரணப் பயத்தில் மாரடைப்பு வந்து இறந்து போவதும் உண்டு. ஆகவே, பெரும்பாலும் அந்த அரியணை காலியாகவே இருக்கும். இவற்றையெல்லாம் அறிந்து ஆட்சி செய்ய முன்வந்த ஒருவர் தனது ஆட்சி காலம் முடிந்து ஆற்றைக் கடந்து காட்டுக்குச் செல்லத் தயரானார். அவரை வழியனுப்ப ஏராளமான மக்கள் வந்திருந்தார்கள், பகட்டு ஆடைகள், பலபலக்கும் ஆபரணங்கள், தங்கக் கவசம், தங்கவாள் என அரசர் ஆடம்பரமாக நின்றிருந்தார். சாகப் போகிறவருக்கு இத்தனை அலங்காரமும் ஆடம்பரமும் தேவையா? என மக்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். இதுவரை அக்கறைக்கு சென்றவர்களெல்லாம் அழுகையும் புலம்பலுமாகச் சென்றதைத்தான் பார்த்திருக்கிறார்கள். இவர் மட்டும் எப்படி? இத்தணை ஆனந்தமாக! என ஆச்சரியத்தோட பார்த்தார்கள். அந்த வேளையில், காட்டிற்கு அழைத்து செல்ல வந்த சிறிய படகைப் பார்த்து அரசர் கோபம் கொண்டார். சிம்மாசனத்துடன் கூடிய பெரிய படகை கொண்டு வாருங்கள் என ஆணையிட்டார். அதன்படியே, கொண்டுவரப்பட்ட படகில் அமர்ந்து அரசர் மகிழ்ச்சியாக கையசைத்துச் செல்ல மக்கள் வியப்புடன் வழியனுப்பி வைத்தனர்.

மற்ற அரசர்களைப்போல் அழுது புலம்பாமல் ஆனந்தமாகச் செல்வதைப் பார்த்த படகோட்டி மிகவும் குழம்பிப் போனான். ஏனென்றால் அவன் பல அரசர்களை அழுகையோடு காட்டில் விட்டு வந்தவன். ஆகவே அடக்கிக் கொள்ள முடியாமல் “அரசரே நீர் எங்கே செல்கிறீர் தெரியுமா?” என்று கேட்டான் “தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்” “அங்கே சென்றவர்கள் திரும்பியதில்லை தெரியுமா?” “அறிவேன் நானும் திரும்பி வரப்போவதில்லை” “பிறகு எப்படி உங்களால் மட்டும் மகிழ்ச்சியாக செல்ல முடிகிறது” “அதுவா நாள் என்ன செய்தேன் தெரியுமா?” முதல் ஆண்டில் ஆயிரம் வேட்டைக்காரர்களை காட்டிற்கு அனுப்பினேன். அவர்கள் கொடிய மிருகங்களை எல்லாம் கொன்றுவிட்டார்கள். இரண்டாம் ஆண்டில் ஆயிரம் விவசாயிகளை அனுப்பினேன். அவர்கள் காட்டைத் திருத்தி, உழுது இன்று ஏராளனமான காய்கறிகள், உணவு தானியங்கள், பழவகைகள் தயார். மூன்றாம்

ஆண்டில் ஆயிரம் கட்டிடக்கலை நிபுணர்கள், தொழிலாளர்களை அனுப்பினேன். இன்றைக்கு வீடு வாசல், அரண்மனை, சாலைகள் எல்லாம் தயார். நான்காம் ஆண்டில் ஆயிரம் அரசு அதிகாரிகளை அனுப்பினேன் நிர்வாகம் சிறப்பாக உள்ளது. அங்கே நான்காயிரம் பேரும் தங்கள் மனைவி மக்களுடன் நலமாக வாழ்கிறார்கள். இப்போது காட்டிற்கு செல்லவில்லை. என்னுடைய நாட்டிற்குச் செல்கிறேன். சாவதற்குச் செல்லவில்லை வாழ்வதற்கே செல்கிறேன். அதுவும் ஆட்சிசெய்வதற்கே செல்கிறேன். உனக்கு அரண்மனை படகோட்டி வேலை வேண்டுமானால் இப்பொழுதே வந்துவிடு என்றார். இவ்வுலகில் வாழந்து மடிவதற்காக நாம் படைக்கப்படவில்லை. சாகாமைக்கென்றே படைக்கப்பட்டோம். வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டால் முடிவில்லாத உன்னத வாழ்வை உரிமையாக்கிக் கொள்ளலாம்

**உன்னத வாழ்வு**

அ) ஆபிரகாம் கால்நடைகளும் வெள்ளியும், தங்கமும், மிகுதியான உடைமைகளும் கொண்ட பெரிய செல்வராக இருந்தார் (தொநா13.2). ஆனாலும் இவ்வுலகப்போக்கின்படி வாழாமல் ஒரு பரதேசியைப்போல கூடரங்களில் குடியிருந்தார். எல்லாவற்றையும் விட கடவுளுக்கே முன்னுரிமை அளித்தார். அவரின் நோக்கமும் ஏக்கமும் விண்ணகத்தை நோக்கியே இருந்தது. கடவுள் கட்டிய அசையாத அடிதளமுள்ள ஒரு நகரை எதிர்நோக்கியிருந்தார் (எபி11:10). ஆகவே, அவர் விசுவாசத்தின் தந்தையானார்.

ஆ) பவுல் உயர்குடியில் பிறந்து, பெரிய செல்வந்தகராக இருந்து, சிறந்த அறிவாளியாக திகழ்ந்த போதிலும், அவர் இவ்வுலகப் போக்கின்படி ஒழுகாமல், விண்ணுலகை வாழ்வை எதிர்நோக்கியே வாழ்ந்தார். இம்மண்ணுலகில் தற்கால குடி என்பதை அறிந்துகொண்டார். இவ்வுலகத்தின் பார்வையில் ஒரு பைத்தியகாரனைப்போல காணப்பட்டாலும், நிலையான விண்ணக கீரிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஆகையால், உலகப்போக்கின்படி ஒழுகாமல் தந்தையாம் கடவுளின் பார்வையில் உன்னதமான சமய வாழ்வு வாழ்ந்து, நம்மையே உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுப்போம்,

**உலக வாழ்வு:**

அ) கடவுளின் தூதரால் நெருப்பிலிருந்து காப்பாற்றபட்ட லோத்தின் மனைவி தான் சேர்ந்து வைத்த செல்வத்தை நினைத்து திரும்பிபார்த்தாள், உடனே உப்புத்தூனாக மாறினாள் (மத் 19:16-24)

ஆ) இயேசுவை பின்பற்ற விரும்பிய இளைஞர் ஏராளமான சொத்துக்களையுடையவர். சிறுவயது முதல் எல்லா கட்டளைகளையும் கடைபிடித்தவர் ஆனாலும், கடவுளைவிட இம்மண்ணுலக செல்வத்தை பெரிதென எண்ணியதால், நிலைவாழ்வை பெறமுடியாதவாறு வருத்தத்தோடு சென்றுவிட்டார் (மத் 19:16-24).

இ) தொடக்கத் திருச்சபையில் யாரும் கட்டாயப்படுத்தவில்லை. அப்படி ஒரு போதனையும் அளிக்கப்படவில்லை. ஆனால், மனமுவந்து தங்கள் செல்வங்களை கொண்டுவந்து பொதுவாய் அனுபவித்தார்கள். இத்தகைய திட்டத்தை தங்களின் புகழ்ச்சிக்காக பயன்படுத்த துடித்த தம்பதிகளே அனனியா சப்பிராள். கடவுளின் ஆவியாருக்கு எதிராக பொய் சொன்னதால் இருவரும் கீழே விழுந்து இறந்து போனார்கள் (திப 5:1-11)

ஆகையால் உலகப்போக்கின்படி ஒழுகும் எவரும் உன்னத வாழ்வில் உரிமைபேறு அடையார் (எபே5.5). ஏனெனில் உலகம் மறைந்து போகிறது. அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால், கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பார் (1யோவா 2:17). ஆகவே, ஒப்பற்ற செல்வமாகிய இயேசுகிறிஸ்துவை அறிந்து, அவரை பணிந்துகொள்வதன் மூலம் அவர்தரும் அழியாத வாழ்வை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். ஆமென்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

தமஸ்கு வீதியிலே சென்று கொண்டிருந்த சவுல் என்ற இளைஞரை ஆண்டவர் சந்தித்தார். இறை ஒளி சவுலின் மேல் ஒளிர அவர் கீழே விழுந்தார். அந்த சந்திப்பு அவருடைய வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. சவுல் பவுலானார்.

**இறைவன் சந்திக்கும் காலம் :**

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலம் உண்டு. அவ்வாறே இறைவனைச் சந்திக்கிற காலம் ஒன்றும் உண்டு. அவர் நம்மைச் சந்தித்து மாற்றத்திற்கு அழைத்துச் செல்லும் காலம் உண்டு. நம்மோடு உடன்படிக்கை செய்து மேன்மைப்படுத்தும் தருணமும் உண்டு. அத்தகைய நாள்களை நம்முடைய வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வருகின்றன.

பல நேரங்களில் காலத்தின் அருமையை உணராமல் வாழ்கின்ற மக்களைக் குறித்து இயேசு பரிதாபப்பட்டு இவ்வாறு உரைக்கிறார். "வெளிவேடக்காரரே. நிலத்தின் தோற்றத்தையும் வானின்தோற்றத்தையும் ஆய்ந்து பார்க்க அறிந்திருக்கும் போது இக்காலத்தை நீங்கள் ஆய்ந்து பாராமல் இருப்பது எப்படி?" (லூக் 12:56)

ஆண்டவர் தம் பிள்ளைகளைச் சந்திக்கும் காலம் அற்புதமான ஒரு காலம். அந்த சந்திப்பினால் அளவற்ற நன்மைகளைக் கட்டளையிடுகிறார். இறைவன் நம்மைச் சந்திக்க விரும்புகிறார். நம் வாழ்க்கையில் நாம் நினைத்ததைவிட பன்மடங்கு நம்மை ஆசிர்வதித்து உயர்த்த விரும்புகிறார்.

நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட அருளை வீணாக்க வேண்டாம். தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன். விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன். இதுவே தகுந்த காலம். இன்றே மீட்பு நாள் (2 கொரி 6:1-2). எனவே மீட்பின் நாள்களை எதிர்கொள்கிற மக்களாய் வாழ்வோம். நாட்களை வீணாக்காமல் வாழ்வோம். மக்கள் அறியாமையில் வாழ்ந்த காலத்தில் கடவுள் இதனைப் பொருட்படுத்தவில்லை. ஆனால் இப்பொழுது எங்குமுள்ள மக்கள் யாவரும் மனமாற வேண்டுமென்று அவர் கட்டளையிடுகிறார்.

இன்று நம்மைத் தாழ்த்தி மீட்புக்காக கையளிப்பதற்காக மட்டுமல்ல அநேக மக்களை கடவுளின் மீட்பு திட்டத்தில் கொண்டு வரும் நல்ல வழிகாட்டியாக மாற ஒப்புக் கொடுப்போம். விண்ணுலகம் செல்லும்போது வெறுங்கையோடு அல்ல. மாறாக ஆன்மாக்களோடு செல்ல உறுதியான மீட்பின் திட்டத்தில் ஒன்றிணைவோம்.

**அறுவடையின் காலம்.**

இறைமகன் இயேசு இந்த உலகத்திற்கு வந்தபொழுது இறைவார்த்தை என்கிற விதைகளை அவர் விதைத்தார். சில முட்களுள்ள இடத்தில் விழுந்தன. சில விதைகளை பாதையோரங்களிலும் சில விதைகள் கற்பாறையாகிய நிலத்திலும் விழுந்தன. வேறு சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்து முப்பதும் அறுபதும் நூறுமாக பலன் கொடுத்தன.

இயேசு கெத்சமனி தோட்டத்தில் கண்ணீரோடு செபித்து வியர்வையின் கண்ணீரை விதைத்தார். சிலுவையில் இரத்த விதைகளை விதைத்தார். பெந்தகொஸ்தே நாளில் தூய ஆவியாரைப் பொழிந்து அருள்பொழிவு விதைகளை பொழிநதார்.

விண்ணுலகின் வானதூதர் இவ்வாறு முழக்கமிடுகிறார். பூமியின் பயிர் முதிர்ந்தது. அறுப்பதற்கு காலம் வந்தது. ஆகையால் உம்முயை அரிவாளை நீட்டி எடுத்து வாரும். அப்பொழுது மேகத்தின் மேல் உட்கார்ந்திருந்தவர் தமது அரிவாளை பூமியின் மேல் நீட்டினார். பூமியின் விளைச்சல் அறுவடைச் செய்யப்பட்டது. (தி.வெ 14:15-16)

இன்று பலர் ஏனோ தானோ என்று வாழ்ந்து இறைவனன் இரண்டாம் வருகைக்கு தயார் நிலையில் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். களஞ்சியமாகிய விண்ணுலகில் சேர்க்கப்பட இன்றே ஆயத்தப்படுவோம்.

**நீதியின் காலம்**

இயேசு கிறிஸ்து மண்ணுலகத்திற்கு வரும்போது அவர் நீதியுள்ள நீதிபதியாக வருவார். அநீதி செய்வோர் செல்வச் செழிப்புடன் வாழலாம். ஆனால் அநீதியும் கொடுமைகளும் என்றைக்கும் நீடித்திருக்காது. ஏனென்றால், ஒரு நாள் வரும். அப்பொழுது தாம் நியமித்த இவரைக் கொண்டு அவர் உலகத்துக்கு நேர்மையான தீர்ப்பு அளிப்பார் (திப 17:31).

எனவே உலகிற்கு நீதி வழங்க ஆண்டவர் வருவார். அந்த நாள் வெகு தொலைவிலில்லை. நம்முடைய ஓட்டத்தை நாம் வெற்றியோடு ஓடி முடிப்போம். ஒரு நாள் அந்த ஒளிமயான நாட்டிற்குள் மகிழ்ச்சியாய் செல்வோம்.

நற்பணி V. **செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

## மே 2024 வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 05 | புளியால்<br>9787491588 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 2. | 05 | சருகணி<br>9943632636 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 3. | 05 | சாயல்குடி<br>6383152402 | நற்பணி S.A. அல்போன்ஸ்<br>9994168051 |
| 4. | 05 | ஆவுடைப் பொய்கை<br>8489703006 | செயலர்<br>9787967272 |
| 5. | 11 | பாம்பன்<br>9790605049 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |
| 6. | 11 | தங்கச்சிமடம்<br>9585998444 | செயலர்<br>9787967272 |
| 7. | 11 | இராமேஸ்வரம்<br>9047998614 | நற்பணி A. சத்தியேந்திரன்<br>6379405762 |
| 8. | 12 | இராஜசிங்கமங்கலம்<br>9843752061 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 9. | 12 | தேவகோட்டை<br>9095866732 | செயலர்<br>9787967272 |
| 10. | 26 | இடைக்காட்டூர்<br>9442857812 | நற்பணி S. சகாயராணி<br>9442254152 |
| 11. | 26 | மானாமதுரை<br>9944386477 | நற்பணி A. சகாயராஜா<br>9443509152 |



காசா விமான நிலையம். தனது மூட்டை முடிச்சுகளோடு வெளியே வந்தார் அன்னைத் தெரசா. அவரைப் பரிசோதித்த பாதுகாப்பு அதிகாரி, "உங்களிடம் ஆயுதம் எதுவும் இருக்கிறதா?" என்று கேட்க, அதற்கு அன்னை அமைதியாக, "ஆமாம் இருக்கிறது" என்று சொன்னதும் அதிர்ந்து போன அதிகாரிகள், "எங்கே ஆயுதம்?" என்று கேட்க, கண்களில் ஒளிவீச புன்னகையுடன் சொன்னார் அன்னை ''அது தான் . . . உலகிலுள்ள அனைவரையும் தாக்கும் அன்பு என்ற ஆயுதம்!".

அன்னை மரியா மனித குலத்தின் மீது கொண்ட வரம்பில்லா அன்பின் வெளிப்பாடே "நான் ஆண்டவரின் அடிமை. உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று இறைவனுக்கு உகந்த தூய நறுமணம் மிக்க பலியாய் தம்மையே அர்ப்பணித்த நிகழ்வாகும். இறை இயேசுவில் வழியில் அவரைப் போலவே வாழ்ந்த பணி செய்த பலரும் தங்களது பணியால் அன்னை மரியாளுக்கு தங்களின் வணக்கத்தை செபமாலையாக, மன்றாட்டாக அளித்திருக்கின்றனர். அன்னை மரியாளின் வணக்க மாதமாகிய மே மாதத்தில் சீடர்களின் முதல் சீடரான மரியாவிற்கு நாம் எப்படி நமது வணக்கத்தை அளிக்கலாம் என்பது பற்றி அன்னையின் தெய்வீக ஒளி படர்ந்த செயல்களை, அவரின் வார்த்தைகளை மனதில் நிறுத்தி சிந்திப்போம்.

**இறை அனுபவங்களை தியானித்தல் :**

மரியா இறைவார்த்தைகளுக்கு அடிபணிந்து தம்மை அர்ப்பணித்த பின் நடந்த இறை அனுபங்களை "உள்ளத்தில் இருந்தி சிந்தித்தார்" என்றும், "தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார்" (லூக் 2:19,51) என்றும் பார்க்கிறோம். சீடத்துவத்துவத்தில் இறைவார்த்தைகளை உள்ளத்தில் பதித்து வைப்பதும், அதை உள்ளுக்குள் பொதித்து வைத்து அதன் காரண காரியங்களை உன்னிப்பாக தியானிப்பதும் முக்கியத்துவம் வாய்ந்தது. அது நம்மை அடுத்த கட்டம் நோக்கி நம்மை நகர்த்திச் செல்லும் உன்னத கொடையாகும்.

"என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாக இருப்பீர்கள் உண்மையை அறிந்தவர்களாகவும் இருப்பீர்கள்" (யோவா 8:31,32) என்கிறார் நம் இயேசு.

நம் அன்னை தனக்கு வானதூதர் மூலம் அளிக்கப்பட்ட வார்த்தை அனுபவங்களை துல்லியமாக மனதில் இருந்தி சிந்தித்தார். இறைமகனை கருத்தாங்கி பெற்றெடுத்த போது நிகழ்ந்த இறை அனுபவங்களையும் தம் உள்ளத்தில் இருத்தி தியானித்தவராய் இருந்ததால்தான் இன்று இறை இயேசுவுக்கு மட்டுமல்ல நமக்கெல்லாம் தாயாய், தாய்மையின் அன்பில் நம்மை தாங்கி நமக்காக தம் பரிந்துரையை அளித்துக் கொண்டே இருக்கிறார்.

நாமும் ''அழியக்கூடிய வித்தினால் அல்ல, மாறாக உயிருள்ளதும் நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளோம்" (1பேது 1:23).

எனவே அன்னையைப் போல இறைவார்த்தைகளையும், நமது இறை அனுபவங்களையும் மனதில் இருத்தி தியானிப்போம். நாம் சொல்லும் செபமாலைகளை காட்சி தியானமாக மாற்றிப் பாருங்கள். நமக்குள் புதுபுது இறை வெளிச்சங்கள் ஒளிர்வதை அனுபவிக்க முடியும். அந்த ஒளியே நாம் ஏற்றும் மெழுகுதிரியாய் சுடர்வீசிப் பிரகாசிக்கட்டும்.

**துன்பமேற்றல்:**

"குழந்தாய். ஆண்டவருக்குப் பணிபுரிய நீ முன்வந்தால். சோதனைகளை எதிர்கொள்ள முன்னேற்பாடு செய்து கொள்" (சீஞா 2:1). ஆம். சீடத்துவத்துவத்தின் மையமே துன்பமேற்றல் தான். "உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:35) குழந்தை இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணிக்க வந்த மரியாவுக்கு சிமியோன் இறைவாக்காக கூறிய வார்த்தை இது. இறைத்திருவுளத்திற்கு "ஆம்" என்று எப்போது தம்மை சமர்ப்பித்தாரோ அக்கணம் முதல் அவர் துன்பங்களையும். சோதனைகளையும் சந்தித்தார் என்பது அவரின் சீடத்துவத்திற்கு மேலான சான்றாகிறது. "மரியாளின் வாழ்நாள் முழுவதுமே வாளின் நிழல் அவர் மேல் இருந்தது" என்று தூய அகுஸ்தினார் கூறியுள்ளார்.

சீடத்துவத்தின் அடித்தளமே துன்பம் தான் என்பதால்தான "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்". என்று கூறி நமக்கு மனவுறுதியை அளிக்கிறார் நம் தெய்வம்.

"அன்புக்குரியவர்களே. துன்பத்தியில் நீங்கள் சோதிக்கப்படும் போது எதோ நேர்ந்து விட்டதென வியக்காதீர்கள். மாறாக. கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்குகொள்கிறீர்கள என எண்ணி மகிழுங்கள்" (1பேது 4:12). இது இயேசுவின் தலைமைச் சீடரின் அனுபவ வார்த்தைகள். அன்னை மரியா துன்பத்தில் தளரா உள்ளத்தோடு திடமாய் நின்று இறை திருவுளத்தை மகிமையாய் நிறைவேற்றினார். துன்பம். அவமானம். வேதனை. சோதனைகளில் இயேசுவின் முதன்மை சீடராய் திகழ்ந்த அன்னைமரியை நாம் முன்னோடியாகக் கொண்டிருக்கிறோம் என்றால் அதுவே நாம் அவருக்குச் சாற்றும் புகழ்மாலையாகும்.

"அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" (யோவா 2:5) அன்னை பணியாளரிடம் அறிவித்தது அவ்வளவுதான். ஆனால் நம் அன்னையின் ஒற்றை வார்த்தையில் பொதிந்திருக்கும் மறைபொருள்கள் ஏராளம் ஏராளம். இயேசுவின் வார்த்தைகளைக் கடைபிடித்தால் போதும். வெறுமையான காலி தொட்டிகளாயிருக்கும் மனிதர்கள் வாழ்வு உயர் ரக கனிரசம் ததும்பும் அர்த்தமுள்ள வாழ்வாக மாறிப்போகுமே. வெற்று வாழ்வு வெற்றி வாழ்வாக மலருமே.

**அன்னையின்இது ஒரு வகை அறிவிப்பு**

அன்னை மரியாவின் பாடல்களில் மகிழ்ச்சியும் பேருவுவகையும் வெளிப்படையாகத் தெரிவது போல இருந்தாலும். ஆன்மீக. சமூக. அரசியல் புரட்சியை உள்ளடக்கிய அர்த்தமுள்ள பாடலாகும். அவரின் பாடல் உலகிற்கு சொல்லும் நுட்பமான நற்செய்தி அறிவிப்பு தனித்துவமிக்கது.

இறை அனுபவம் இறைவார்த்தை அனுபவம் நற்செய்தி அறிவிப்பாக பரிணாமம் பெறும்போது மூவொரு இறைவன் நம்மில் மகிழ்வார். அன்னை மரியாவிற்கு நாம் அளிக்கும் காணிக்கையாகவும் பாடலாகவும் அது அமையும்.

**உருவாக்கும் சீடத்துவமாக ... :**

சீடத்துவத்தின் அடுத்த நிலை சீடர்களை உருவாக்குதல் ஆகும். அன்னை இருக்குமிடம் எல்லாம் தூய ஆவியாரின் அருள் அளவின்றி பெருகியதை எலிசபெத்தைச் சந்தித்த

நிகழ்விலும், சீடர்களோடிருந்து ஒன்றித்த நிலை இறைவேண்டுதலால் பெந்தகோஸ்து நாளில் சீடர்கள் ஆவியானவரால் ஆட்கொள்ளப்பட்ட நிகழ்வினும் நாம் காண்கிறோம்.

தம்மிடம் என்ன இருக்கிறதோ அதை தான் மற்றவருக்குக் கொடுக்க முடியும். அன்னை மரியா தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு ஆவியாரின் கனிகளைக் கொண்டிருந்தார். அவரின் கொடைகளில் ஒளிர்ந்தார். எனவேதான் சாமான்ய மனிதர்களை இறைவாக்குரைக்கவும் கடவுளின் சீடத்துவத்தில் பங்கேற்க வைக்கவும் உடனிருந்து உதவினார். ஒன்றித்து இறைவேண்டுதல் செய்தார். "தூய ஆவியாரால் இயக்கப்பட்டு" கடவுளின் உரிமைப் பிள்ளைகளாய் உண்மையாம் கிறிஸ்துவை உரக்க அறிவிக்கும் உரத்தையும் திண்மையையும் சீடர்கள் பெற்றுக்கொண்டனர். ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்றம் பெற்ற தூயவாழ்வினால் அவர்கள் பேறு பெற்றவர்களானார்கள். அன்னை மரி தமது சீடத்துவத்தில் முடிவு செய்ய இயலா எல்லையில் நிற்கின்றார்.

" சீடராகுவோம் சீடராக்குவோம்" என்கிற லட்சியம் நோக்கிய நமது பணிப் பயணத்தில் நமது வாழ்வால், செயல்பாட்டினால், வார்த்தைகளால் சீடர்களை உருவாக்க நாமும் கடமைப்பட்டிருக்கிறோம் உருவாக்கிக் கொண்டும் வருகிறோம். "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" (மத் 28:19 ) என்று ஊக்கமளிக்கும் நம் இயேசு "இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களோடு இருக்கிறேன்" (மத் 28:20) என்று உத்திரவாதமும் அளித்திருக்கி றாரே.

"எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின" "என் சிறை வாழ்வினால் சகோதரர் சகோதரிகளுள் பெரும்பாலோர் ஆண்டவரை உறுதியாக நம்பிக் கடவுள் வார்த்தையை அச்சமின்றி எடுத்துரைக்க துணிவு பெற்றிருக்கிறார்கள் " (பிலி 1:12,14) தூய பவுலின் சிறப்பம்சம் எதுவென்றால் துன்பம், துன்பத்தின் நடுவே அவரின் தீவிர நற்செய்திப்பணி மேலும் பலரை சீடத்துவ வாழ்வுக்கு அழைத்து வந்து நற்செய்தியை அறிவிக்க வைத்ததே.

"என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது " (திப 4: 20 ) என்று வைரம் பாய்ந்த துணிவுடன் திருத்தூதர்கள் அறிவித்த நற்செய்தியால் "கடவுளது வார்த்தை மேன்மேலும் பாவி வந்தது. சீடர்களின் எண்ணிக்கை எருசலேம் நகரில் மிகுதியாகப் பெருகிக்கொண்டே சென்றது" (திப 6:7) சீடத்துவம் சீடர்களை பெருக்கிக்கொண்டு சென்றது.

நமது நற்செய்தி அறிவிப்பு பணித்தளத்தளத்தில் சீடர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வருகிறது. பெற்றுக்கொண்ட அழைப்பின் மேன்மையை முழுமையாப் புரிந்து கொண்டு எவ்வகையிலும் உலகத்தோடு சமரசம் செய்யாமல் இந்த நற்செய்திப் பணியின் தூய்மைத்தன்மையைக் காப்பதில் உறுதி கொண்டிருப்பதும் சீடத்துவ வாழ்வில் அன்னை காட்டிய அன்பு வழி பயணத்தில் உண்மைச் சீடராக வாழ்வதும், உண்மைச்சீடர்களை உருவாக்குவதுமே இந்த வணக்க மாதத்தில் அன்னையிடம் நாம் வைத்து மன்றாடும் மலர் காணிக்கையாகட்டும்.

"நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக" என்ற யூபிலி இறைவேண்டலை உணர்ந்து செபிப்போம். நற்செய்தி அறிவிப்பின் மூலம் "கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி இயேசுவின் தாயாய், சகோதரர், சகோதரிகளாய்" நாமும் வாழ முடியும். அன்னை மரியா அதற்காக தம் அன்பு மகனிடம் தமது பரிந்துரைத்துக் கொண்டே இருப்பார் என்பது உறுதி.

நமது அருமையான ஒப்பற்ற அன்னைக்கு வெறும் மெழுகுதிரியை ஏற்றி பிராத்தித்தால் போதுமா? "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க!" (மத்5:16) என்று நம் இயேசு கூறியிருக்கிறாரே! அன்னையைப் போன்று நமது நற்செயல்களால் ஒளிர்ந்து நிற்பதல்லவா அவருக்கு மகிழ்வளிக்கும்.

"கிறிஸ்து நமக்காகத் தம்மை நறுமணம் வீசும்பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து நம் மீது அன்புகூர்ந்தது போல" (எபே 5:2) நாமும் இறையன்பும், பிறரன்பும் கொண்டு வாழும்போது முழு மனதோடு பணியாற்றி மனநிறைவடையும் போதும் அது அன்னைக்கு நாம் சாற்றும் மாலையாக, சாம்பிராணியின் நறுமணமாக அமையும். இதுவே நாம் அவருக்குச் செலுத்தும் உயர்ந்த வணக்கமாகும்.

நற்பணி **ஜெஸி. P.**

## மே 2024 — இனம் காணப்பட்டவர்கள் அறிமுகப்பயிற்சி

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 05.05.23 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி S. ராஜேந்திரன் |
| 05.05.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. சகாயராணி<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி P. சகாயராணி |
| 05.05.24 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. சகாயதமிழ்செல்வி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 12.05.24 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி A.R. சூசைராஜ்<br>நற்பணி S. அந்தோனிபிரகாஷ் |
| 12.05.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி L. ஆரோக்கியசாமி |
| 12.05.24 | வியான்னிஅருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி R. ஆரோக்கியசாமி<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 12.05.24 | புனித அன்னாள் கோவில் குருமிளாங்குடி | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி S. சேசுராஜா<br>நற்பணி X. அந்தோனி விக்டர் |
| 18.05.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி<br>நற்பணி K. பில்கேட்ஸ் |
| 26.05.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 26.05.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. பெமிலா ஸ்டீபன்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி A. ஜான்சி மேரி |
| 26.05.24 | புனித அந்தோணியார் கோவில், கமுதி | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01 | அம்புரோஸ் அறநெறி அமைப்புக் கூட்டம் | நற்பணி. சூ. ஜஸ்டின் இல்லம் பாம்பன் |
| 01 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 03 | முழு இரவு செபம் | மகிண்டி மிக்கேல்பட்டணம் |
| 04 | பரிந்துரை செபம் | திருஇருதய ஆண்டவர் திருத்தலம் இடைக்காட்டூர் |
| 05. | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால், சருகனி, தேவகோட்டை சாயல்குடி |
| 05. | புதிய பணியாளர்கள் பயிற்சி & இனம் காணப்பட்டோர் அறிமுகப் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி தந்தை ஜோசப் சேவியர் அரங்கம் காளையார்கோவில், புனித அருளானந்தர் திருத்தலம்,ஓரியூர் |
| 10. | நற்பணி ஆரோக்கியமேரி இல்ல முதல் இறை உணவு ஏற்பு விழா | லெயோனார்டு நகர் |
| 11. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசா கோவில் தங்கச்சிமடம் |
| 11. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமேஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன் |
| 12. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலவை அன்னை அமைதியகம், புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் |
| 12. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராஜசிங்க மங்கலம், ஆவூடைப்பொய்கை |
| 12. | இனம் காணப்பட்டோர் அறிமுகப் பயிற்சி | அமலவை அன்னை அமைதியகம், வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை, புனித அன்னாள் கோவில். குருமிளாங்குடி |
| 18. | இனம் காணப்பட்டோர் அறிமுகப் பயிற்சி | புனித குழந்தை தெரசா கோவில் தங்கச்சிமடம் |
| 19. | ஆவியானவர் பெருவிழா | அனைத்து வட்டாரங்கள் |
| 26. | வட்டாரத் தியானக் கூட்டம் | மானாமதுரை, இடைக்காட்டூர் |
| 26. | புதிய பணியாளர்கள் பயிற்சி & இனம் காணப்பட்டோர் அறிமுகப் பயிற்சி | புனித ஆரோக்கிய அன்னை கோவில்,சாயல்குடி, தூயஆவியார் கோவில், இராஜசிங்கமங்கலம் புனித அந்தோனியார் கோவில், கமுதி |

# புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 05.05.24 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி S. இராஜேந்திரன் |
| 05.05.24 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 11.05.24 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி A. யூஜின் அமலராஜ் |
| 12.05.24 | புனித செபமாலை அன்னை கோவில், இரோமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 12.05.24 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | நற்பணி A. சகாயராணி<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி |
| 26.05.24 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி J. ரபேக்கா<br>நற்பணி A. சந்திரபுஷ்பா |
| 26.05.24 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 26.05.24 | புனித அந்தோணியார் கோவில், கமுதி | நற்பணி M. அருள் மரியநாயகம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி T. மைக்கேல் |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

பயனற்ற முணுமுணுப்புப்பற்றி எச்சரிக்கையாக இருங்கள்; பழிச்சொல் கூறாது உங்கள் நாவை அடக்குங்கள். ஏனெனில் மறைவாய்ப் பேசிய எதுவும் விளைவின்றிப் போகாது. பொய் சொல்லும் வாய் ஆன்மாவைக் கொல்லும்.

**சாலமோனின் ஞானம்:1:11**

காடந்த மாதத்தில் உள் உந்துதலில் வளர, 10 வழி முறைகளில் முதல் வழிமுறையான "நம் வாழ்வின் நோக்கம் என்ன என அறிய முயல்வது' பற்றி பார்த்தோம். இம்மாதத்தில் 'அத்தகைய நோக்கம் ஏன் என அறிய முயல்வது' பற்றி இந்த மாதம் பார்ப்போம்.




**ஆர்வம் உருவாக்கிய நோக்கம் :**

சாம் தனது அப்பாவை இழந்ததால், படிப்பில் ஆர்வம் இருந்தும் பள்ளிக்கு செல்லாமல் ஒரு அச்சகத்தில் வேலை செய்து தனது குடும்பத்தை காப்பாற்றி வந்தான். காற்றில் பறந்து வந்த ஒரு காகிதம் சாமுவேலின் கையில் சிக்க, அதை ஆர்வத்தோடு வாசிக்க தொடங்கினான். அது ஜோன் ஆப் ஆர் என்ற வீரப்பெண்ணை பற்றியது. அச்சகத்தில் வேலை செய்வதால் அந்த காகிதத்தை தூக்கி எறிய மனம் வரவில்லை. அந்த வீரமங்கையின் வரலாற்றை மேலும் படிக்க ஆசைப்பட்டு நிறைய தெரிந்து கொண்டார், நிறைய வாசிக்க தொடங்கி 'மார்க் டிவைன்' என்ற புனைபெயரில் நிறைய புத்தகங்களை எழுதினார். பறந்து வந்த காகிதம் தன்னை இப்படியொரு உலக புகழ் பெற்ற எழுத்தாளனாக மாற்றும் என அவருக்கே பின்னர்தான் தெரிந்தது.

**ஆற்றல் உருவாக்கிய நோக்கம் :**

வகுப்பறையில் ஓவிய ஆசிரியர், மாணவர்களை 'இலை' வரையுங்கள் என சொல்ல, மாணவர்கள் அவரவரின் சிலேட்டையும், பல்பத்தையும் எடுத்து வரைய தொடங்கினர். லட்சுமணன் ஓவியத்தில் ஆர்வம் மிக்கவன். தனது வீட்டு சுவரில் தான் கண்டு ரசித்த காட்சிகளை ஓவியமாக வரைவதுண்டு, அதை பெற்றோர்கள் பாராட்டி மகிழ்வதுண்டு. தான் தினமும் பள்ளிக்கு வரும் பாதையில் உள்ள அரச மர இலையை அதிகம் கண்டு ரசித்து வருவதால், இலட்சுமணன் அரச இலையை தனது சிலேட்டில் வரைய தொடங்கினான். வரைந்து முடித்து இலைகளை காமித்த மற்ற மாணவர்கள் ஓவிய ஆசிரியரிடம், ஏச்சும், பேச்சும் அடியும் வங்கினர். பயத்துடன் சென்ற லட்சுமணன் தனது ஓவியத்தை ஓவிய ஆசிரியரிடம் காண்பித்தான். அந்த அரச மர இலையை சிலேட்டில் பார்த்த ஓவிய ஆசிரியர் ஆச்சரியத்தில் அமைதியானார். அடுத்த இலட்சுமணனை புகழ்ந்து பாராட்டி மகிழ்ந்தார். அன்றைய இலட்சுமணன் பின் நாட்களில் ஆர்.கே இலட்சுமணன் என்ற மாபெறும் ஓவியராக திகழ்ந்தார். அவர் வரைந்து வெளியிட்ட 'காமன் மேன்' என்ற புத்தகம் மிகவும் முக்கியம் பெற்றது. தான் பள்ளிக்கு செல்லும் வழியில் பார்த்து, ரசித்த அந்த அரச மர இலையை அப்படியே சிலேட்டியில் வரைய கூடிய ஆற்றல் தன்னை இவ்வுளவு பெரிய ஓவியனாக மாற்றியுள்ளது என்பதை அவர் பின்நாட்களில் புரிந்து கொண்டார்.

**ஆறாத வேதனை உருவாக்கிய நோக்கம்:.**

பீகார் மாநிலத்தில் தஸ்ரத் மன்ஜித் என்ற மனிதர் எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தார். அவருடைய ஊரிலிருந்து மருத்துவமனைக்கு செல்ல 70 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டும். காரணம் குறுக்கே ஒரு பெரிய மலை அதனால் அதை சுற்றி செல்ல வேண்டும். அந்த மலை தடையாக இல்லை என்றால் வெறும் 120 மீட்டர் தொலைவு சென்றால் மருத்துவமனையை அடைந்து விடலாம். 1959ஆம் ஆண்டு

தஸ்ரத் மன்ஜித்தின் மனைவி பால்குனி தேவிக்கு உடல் நிலை சரியில்லாமல் போக, அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஆனால் அதிக தொலைவாக இருந்தமையால் பாதி வழியிலேயே அவர் மனைவி இறந்துவிட்டார்கள். இதனால் அதிக மன வேதனை அடைந்த தஸ்ரத் மன்ஜித் தனது மனைவி, இறந்த காரணத்தை ஆராய்ந்து பார்த்தார். ஒருபக்கம் மனைவியின் இறப்பு ஆறாத வேதனையாக இருந்தாலும், இனிமேல் தனது மனைவிக்கு போல யாரும் மருத்துவ உதவி தாமதமாகி இறக்க கூடாது என முடிவு செய்தார். 1960 ஆம் ஆண்டு மருத்துவ மனையை சென்று அடைய தடையாய் இருந்த மலையை தான் தனியாக சென்று பாதை அமைக்க முயன்றார். தனது அரசும் கிராமத்தாரும் ஒத்துழைப்பு தராவிட்டாலும் தானே அதை செய்வேன் என்ற இலட்சியத்தை தனதாக்கி கொண்டார். ஆண்டுகள் கடந்து சென்றன. 1982 இல் 360 அடி தூரமும் 25 அடி ஆழமும் கொண்ட பாதையை அமைத்தார். ஆக 22 ஆண்டுகள் ஒரு தனிமனிதனின் அயராத உழைப்பு, பல மக்களின் உயிரை காப்பாற்ற வழியாக மாறியது. தனது ஆறாத மன வேதனை ஒரு அரசாங்கத்தால் செய்ய முடியாத நோக்கை அடைய காரணமாக அமைந்தது.

**'ஆகாதவன்' என்ற புறகணிப்பு தந்த நோக்கம் :**

லுய்ட்போல்ட் ஜிம்னாளியம்' என்ற பள்ளியில் ஆல்பட் படித்து வந்தான். அந்த பள்ளி மனப்பாடம் செய்து அப்படியே தேர்வில் எழுதும் மாணவர்களை கொண்டாடியது. மனப்பாடம் செய்ய விரும்பாமல் ஒன்றை சரியாக புரிந்து கொண்டு அதை சரியாக ஆராய்ச்சி செய்து புதிய கோட்பாட்டை உருவாக்க நினைக்கும் ஆல்பட் போன்ற மாணவர்களுக்கு 'மக்கு பையன்' என்ற பட்ட பெயர்தான் மிம்சம். ஆல்பட் கேட்கும் கேள்விகளுக்கு ஆசிரியர்களால் பதில் சொல்ல முடியவில்லை. இறுதியாக தலைமை ஆசிரியர் உட்பட அனைவரும் அவனை எங்கள் பள்ளிக்கு "இவன் ஆகாதவன்" என புறக்கணித்து வெளியே தள்ளியது. ஆல்பட் புரிந்து படித்து புதியவற்றை படைக்கும் பள்ளியை தேடி கண்டுபிடித்து சேர்ந்து கணிதம், இயற்பியல் இவற்றில் ஆராய்சிகளை மேற்கொண்டு பிற்காலங்களில் பல ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டார். அவர் தான் மனித குலத்தின் மிகப்பெரிய புத்திசாலிகளில் ஒருவராக மதிக்கப்பட்ட ஆல்பர்ட் ஐன்ஸ்டைன். உலகெங்கும் அவருடைய சிந்தனைகளை, கண்டுபிடிப்பு களைப் பற்றி படிக்காத பள்ளி, கல்லூரி மாணவர்களே இல்லை. இரண்டாம் உலக போரில் ஆல்பர்ட் படித்த 'துய்ட் போல்ட் ஜிம்மானியம், பள்ளியின் மீது குண்டு வீசப்பட்டது. பலத்த சேதம். போர் முடிந்ததும், அந்த பள்ளி மீண்டும் பழையபடி கட்டி முடிக்கப்பட்டது. புதிய கட்டடத்துக்கு, உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானி 'ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்' பெயரைச் சூட்டினார்கள்.

ஆக, ஆர்வம், ஆற்றல், ஆறாத வேதனை, ஆகாதவன் என்ற புறக்கணிப்பு ஆகியவைகள், ஆஹா என உலகம் போற்று வண்ணம் நோக்கங்களை உருவாக்கியுள்ளன.

**அசைபோட அரைநிமிடம் :**

"ஏன் எனது நோக்கம்" என அறிந்தால் "நான் ஏன் பிறந்தேன்" என யோசிக்க மாட்டோம்.

சகோ. **S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# புனித ரீட்டா



ரீட்டா 1381 ஆம் ஆண்டு ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவருக்கு பதினெட்டு வயது நடந்துகொண்டிருந்தபோது இவர் புனித அகுஸ்தினாருடைய சபையில் துறவியாகச் சேரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் இவருடைய பெற்றோருடைய கட்டாயத்தின் பேரில் பெர்டினான்ட் என்ற மனிதனை மணந்துகொண்டார். அவர் முரடனாகவும் ரீட்டாவை எப்போதும் துன்புறுத்துபவனாகவும் இருந்தான். ரீட்டா மிகவும் பொறுமையாக தன்னுடைய கணவர் மனந்திரும்பும்படியாக இறைவனிடம் வேண்டினார். ரீட்டாவிற்கு ஜான், பால் என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தபின் அவருடைய கணவர் மனம்மாறி, புதிய வாழ்க்கை வாழத் தொடங்கினார். திடிரென்று ஒருநாள் அவருடைய கணவரை மர்ம நபர்கள் சிலர் கொன்றுபோட்டார்கள். தன்னுடைய கணவரைக் கொன்றவர்களை மன்னித்தார். ஆனால், அவருடைய பிள்ளைகள் தங்களுடைய தந்தையைக் கொன்றுபோட்ட கயவர்களைக் பழிவாங்க துடித்தனர். அடுத்த ஓராண்டில் ரீட்டாவின் இரண்டு மகன்களும் இறையடி சேர்ந்தார்கள். பிள்ளைகள் இறந்தபின் ஒருநாள் தூய அகுஸ்தினார், தூய திருமுழுக்கு யோவான், தூய நிக்கோலாஸ் ஆகிய மூவரும் இவரைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு போய் அகுஸ்தினாருடைய துறவு மடத்தில் இருந்த சிற்றாலயத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டு, கதவை அடைத்துவிட்டு அங்கிருந்து போய்விட்டனர். அடுத்தநாள் துறவு மடத்தில் இருந்தவர்கள் சிற்றாலத்திற்கு வந்தபோது அது அடைக்கப்பட்டுக் கிடந்தது. ஒருவழியாக மடத்தில் இருந்தவர்கள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனபோது அங்கே ரீட்டா முழந்தாள் படியிட்டு இறைவனிடம் உருக்கமாக வேண்டிக்கொண்டிருந்தார். அங்கிருந்தவர்கள் இறையருளால்தான் அவர் இங்கு வந்திருக்கிறார் என்பதை உணர்ந்து அவரை துறவுமடத்தில் துறவியாக சேர்த்துக்கொண்டார்கள். துறவுமடத்தில் இவர் இயேசுவின் பாடுகளை அதிகமாக தியானித்தார். அத்தகைய தருணத்தில்தான் 1441 ஆம் ஆண்டு இயேசுவின் தலையில் இருந்த முள்முடியில் இருந்த ஒரு முள்ளானது அவரது நெற்றியில் பதிந்து அவருக்கு மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியது. அவர் தன்னுடைய நெற்றியில் பதிந்து வேதனையை ஏற்படுத்தும் முள்ளை நீக்குமாறு எவ்வளவோ மன்றாடினார். ஆனால் அது அவருடைய நெற்றியில் நிலைத்திருந்தது. நெற்றியில் ஏற்பட்ட காயத்திலிருந்து வழிந்த இரத்தம் சில நேரம் நாற்றத்தை ஏற்படுத்தியதால் துறவுமடத்தில் இருந்தவர்கள் அவருடைய அறையிலிருந்தே செபிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இதனால் அவர் தன்னுடைய அறையிலே தங்கி இறைவனிடம் செபித்து வந்தார். அந்த நாட்களில் எல்லாம் அவர் நற்கருணையை மட்டுமே உண்டு வந்தார். இப்படி செபத்திலும் தவத்திலும் தன்னுடைய வாழ்வைச் செலவழித்த ரீட்டா 1457 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். 1900 ஆம் ஆண்டு திருத்தந்தை பனிரெண்டாம் சிங்கராயரால் இவர் புனிதையாக உயர்த்தப்பட்டார்.

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்

## என்னை மன்னியும்

- ஆண்டவர் உம்மைக் காக்கின்றார். அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார். அவரே நிழல் ஆவார், என்பதை மறந்து ஆண்டவரின் பாதுகாப்பமையும், உடனிருப்பபையும் மறந்து. பிற தெய்வங்களை நோக்கி மனதைத் திருப்பி வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திபா 121:5)
- அஞ்சாதே நான் உன்னோடு இருக்கிறேன். கலங்காதே நான் உன் கடவுள். நான் உனக்கு வலிமை அளிப்பேன். உதவி செய்வேன் என்ற வாக்குறுதியை மறந்து துன்ப நேரங்களில் நம்பிக்கையற்று மனச்சோர்வுடன் வாழ்ந்து வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (எசா 41:10)
- நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி தம் தூதர்களுக்கு அவர் கட்டளையிடுவார் என்பதை உணராமல் கடவுளின் பாதுகாப்பில் நம்பிக்கையற்று வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். என்னை மன்னியும் (திபா 91:11)

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

இம்மாத செபக் கருத்து

- துறவற மற்றும் குருத்துவ உருவாக்கத் தளங்களில் உள்ளோர் நற்செய்திக்குச் சான்றாக வாழும் அர்ப்பண உறுதியை உருவாக்கத்தில் பெற்றுக் கொள்ள
- துறவற மற்றும் அருள்பணி உருவாக்கத் தளங்கள் நம்பிக்கை மற்றும் ஆன்மீக வாழ்வை ஆழம்பெறச் செய்து. மானுடப் பண்புகளினல் வளர்த்தெடுக்க
- இந்தியாவில் நடைபெறும் மக்களவைத் தேர்தல் அமைதியுடன் நடைபெற்று இறைவன் விரும்பும் நல்லாட்சி அமைய.
- இந்தியாவில் மதச் சார்பின்மையும் சனநாயக நெறிகளும். அமைப்புகளும் வலுப்பெற
- கோடை வறட்சியிலிருந்து மக்களும், உயிரினங்களும் பாதுகாக்கப்பட
- கத்தோலிக்க திரு அவை தூய ஆவியாரின் எழுச்சி பெற்று எல்லா நிலைகளிலும் கனி கொடுக்க

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- இந்தியாவில் இறைவன் விரும்பும் நல்லாட்சி அமைய அதிகாலையில் தினமும் செபித்தல்.
- தூய ஆவியாரின் பெருவிழாவைத் தக்க தயாரிப்புகளுடன் கொண்டாடுதல்; ஆவியானவரின் ஏதாவது ஒரு கனி வாழ்வில் வளர்தல்.






# புதிய பணியாளர்கள் பயிற்சி



படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **திருத்தூதர் பணிகள் 2,3,4 அதிகாரங்களுக்குள்**








பணியாளர்கள் பயிற்சி - திண்டிவனம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அமைதியம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை - அருள்சான்று நிலையம்


**Narseithi Paniyalar** (தனிச்சுற்றுக்கு மட்டும்)

is published on behalf of the Commission for Proclamation, Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.) Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com